செய்யப்படுகின்றன. ஆக, அங்கு தேவையான அளவு மீன் பெறப்படுகிறது. அங்கு 8 மீன் பண்ணைகளும் ஏற்கெனவே இருக்கின்றன. அவற்றின் உற்பத்தி 6 இலட்சம். அங்கு மீன் பண்ணைகள் சரியாக செயல்படவில்லை என்று மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இந்த அவைக்குத் தவறான தகவலை தருகின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொண்டு, 'எல்லோரும் எல்லாமும் பெறவேண்டும்; இங்கு இனி இல்லாமை இல்லாத நிலை வேண்டும்' என்ற உயர்ந்த இலட்சியத்தோடு (மேசையைத் தட்டும் ஒலி) நல்லாட்சி நடத்தும் தமிழக முதல்வர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் இந்த ஆண்டு மட்டும் ஏறத்தாழ 50 கோடி ரூபாயினை ஒதுக்கி மீன் பண்ணைகள் அமைக்க உத்தரவிட்டு, ஒப்பந்தங்கள் பெறப்பட்டு, இப்போது அந்தப் பணிகள் நடைபெற்று வருகின்றன என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 29, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.

29—

அடிப்படை வசதிகள்

***445—திரு. ஆர். அருள்செல்வன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை பெரியார் அரசு பொது மருத்துவமனைக்குக் கூடுதலாக மருத்துவர்கள் நியமனம் செய்யவும், அடிப்படை வசதிகளை மேம்படுத்தவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு டாக்டர் விஎஸ். விஜய், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவையின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்கிறேன்.

2013 பிப்ரவரி 7]

(அ) மற்றும் (ஆ) நாகை மாவட்டம், மயிலாடுதுறை அரசு மருத்துவமனை 260 படுக்கை வசதிகள் கொண்ட ஒரு தாலுகா மருத்துவமனையாகும். இம்மருத்துவமனையில் நாளொன்றுக்கு சராசரியாக 1,930 வெளி நோயாளிகளும், 266 உள் நோயாளிகளும் சிகிச்சை பெற்று வருகின்றார்கள். இம்மருத்துவமனையில் 28 மருத்துவர்களும், 36 செவிலியர்களும் பணியில் உள்ளனர். மேலும், இம்மருத்துவமனையின் செயல்பாட்டினைக் கருத்தில் கொண்டும், மருத்துவப் பணிகள் மறுசீரமைப்பின்படியும் மாண்புமிகு அம்மா அவர்களின் அரசால் கூடுதலாக 4 புதிய மருத்துவர் பணியிடங்கள் அம்மருத்துவமனைக்கு வழங்கப்பட்டு, அந்த மருத்துவமனை சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது என்பதைத் தங்கள்வாயிலாக இம்மாமன்றத்திற்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். அருள்செல்வன் அவர்கள்.

திரு. ஆர். அருள்செல்வன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மயிலாடுதுறை அரசு மருத்துவமனை, மயிலாடுதுறை தொகுதி, பூம்புகார் தொகுதி முழுவதுமாக மக்கள் பயன்பெறக்கூடிய மருத்துவமனையாக இருக்கிறது. மாவட்ட மருத்துவமனைக்கு இணையாக, இன்னும் அதிகமாக மகப்பேறு நடைபெறுகின்ற அரசு மருத்துவமனையாக இருக்கிறது. இந்த மருத்துவமனையிலே உதவி மருத்துவர்கள் போதிய அளவில் இல்லை மருத்துவர் பணியிடங்களை அதிகப்படுத்த வேண்டும். அதைப்போல இந்த மருத்துவமனையில் E.N.T. காது, மூக்கு, தொண்டை மருத்துவர்கள் இல்லை. அவர்களை நியமனம் செய்ய வேண்டும். மனநல மருத்துவ நிபுணர் இல்லை. அந்த மருத்துவரை நியமனம் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அதேபோல பல் மருத்துவர், மருத்துவமனைப் பணியாளர்கள் போதுமான அளவிலே இல்லை. C.T. Scan வசதி ஏற்படுத்தித் தரும்படி உங்களைக் கேட்டுக்கொள்கிறேன். X-ray, E.C.G. எடுப்பதற்கு Technician ஒரு நபர்தான் இருக்கிறார். அவர் விடுமுறையில் சென்றால் மக்களெல்லாம் தனியார் மருத்துவமனைக்குச் செல்லவேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இரத்த வங்கிக்கான கட்டடம் மிகவும் பழுதடைந்து, மழை நேரங்களிலே மழைநீர் ஒழுகுகின்ற சூழ்நிலை இருக்கிறது. ஆகவே, அதற்கு ஒரு புதிய கட்டடம் கட்டித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். மேலும், அங்கு I.C.U. பிரிவு இருக்கிறது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உறுப்பினர், கேள்வியைக் கேளுங்கள்.*

திரு. ஆர். அருள்செல்வன்: *அது செயல்படவில்லை. ஆகவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் இந்தக் குறைகளையெல்லாம் நிறைவு செய்து தருவார்களா, என்று மாண்புமிகு பேரவைத் தலைவர்வாயிலாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு டாக்டர் வி.எஸ். விஜய்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நாகை மாவட்டம், மயிலாடுதுறை தாலுகா அரசு மருத்துவமனையில் சுமார் 499 பெரிய மற்றும் 531 சிறிய வகை அறுவை சிகிச்சைகள் செய்யப்படுகின்றன. இந்த மருத்துவமனையில் மாதம் ஒன்றிற்கு 250 பிரசவங்கள் பார்க்கப்படுகின்றன. இம்மருத்துவமனை ஒருங்கிணைந்த மகப்பேறு மற்றும் சிசு கவனிப்பு மையமாகவும், பச்சிளம் குழந்தைகள் கவனிப்பு மையமாகவும், நச்சு முறிவு சிகிச்சை மையமாகவும் செயல்பட்டு வருகிறது. மேலும், முடநீக்கியல் பிரிவும் இம்மருத்துவமனையில் சிறப்பாகச் செயல்பட்டு வருகிறது. இம்மருத்துவமனையில் உள் நோயாளிகள் மற்றும் வெளி நோயாளிகளின் எண்ணிக்கைக்கேற்ப மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் பணிபுரிந்து வருகிறார்கள். இந்த மருத்துவமனை தாலுகா மருத்துவமனையாக இருந்தாலும், தனி சிறப்பு அளிக்கப்பட்டு அனைத்து வசதிகளுடன் ஒரு மேம்பட்ட மருத்துவமனையாக செயல்பட்டு வருகிறது என்பதைத் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன். E.C.G. Technician மற்றும் பிற பணியாளர்கள் குறித்து கருத்துரு பெறப்பட்டு, அவர்களெல்லாம் நியமிக்கப்படுவார்கள் என்பதையும் தங்கள்வாயிலாகத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

முற்பகல் 11-15

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 30, மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. செங்குட்டுவன், மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.*